General Tamil
2024

நிழல்போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை?

A) வினை உவமை
B) பயன் உவமை
C) வடிவ உவமை
D) உரு உவமை
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பின்வரும் உவமையின் பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.
எடுப்பார் கைப்பிள்ளை
A) எதையும் கேட்காதவர்
B) எடுத்து வளர்ப்பவரின் பிள்ளை
C) யார் எதைச் சொன்னாலும் கேட்டு நடப்பவர்
D) எடுத்து வளர்ப்பவரின் சொல்லைக் கேட்பவர்
E) விடை தெரியவில்லை

‘அப்துல் நேற்று வருவித்தான்’. எவ்வகை வாக்கியம் என்பதை கண்டறிக.

A) எதிர்மறைவினை
B) பிறவினை
C) தன்வினை
D) உடன்பாட்டுவினை
E) விடை தெரியவில்லை

We Shine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

மாணாக்கர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ? என்ன வகை வினா என்பதைக் கண்டறிக.

A) ஏவல்வினா
B) ஐயவினா
C) கொளல்வினா
D) கொடைவினா
E) விடை தெரியவில்லை

We Shine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பின்வரும் விடைக்கேற்ற வினாவினை தேர்ந்தெடுத்து எழுதுக.
பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

A) பரிவாதினி என்னும் வீணை மகேந்திரவர்மன் காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறதா?

B) பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்ததா?

C) பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வீணை இருந்ததா?

D) பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் வீணை எது?

E) விடை தெரியவில்லை

பின்வரும் சொல்லின் இலக்கணக் குறிப்பு – ‘உணர்த்தினென்’.

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

B) தன்மை பன்மை வினைமுற்று

C) தன்மை ஒருமை வினைமுற்று

D) பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை

E) விடை தெரியவில்லை

முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

A) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்

B) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான

C) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்

D) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

E) விடை தெரியவில்லை

சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான குறள் வடிவம் உள்ள தொடரைக் கண்டெழுதுக.

A) யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது வினைபடு பாலால் செவ்விது ஆங்கு

B) கணைகொடிது செவ்விது ஆங்கு வினைபடு யாழ்கோடு அன்ன பாலால் கொளல்

C) செவ்விது ஆங்கு அன்ன கணைகொடிது யாழ்கோடு, வினைபடு பாலால் கொளல்

D) கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல்

E) விடை தெரியவில்லை

அகர வரிசைப்படுத்தி எழுதியவற்றை தேர்க.
தூய்மை, திருவிளக்கு, தவப்பெருஞ்சுடர், தீவினை, துன்பங்கள், தாய்போல்
A) தவப்பெருஞ்சுடர், தாய்போல், திருவிளக்கு, தீவினை, துன்பங்கள், தூய்மை
B) தவப்பெருஞ்சுடர், திருவிளக்கு, தாய்போல், தீவினை, துன்பங்கள், தூய்மை
C) தாய்போல், தவப்பெருஞ்சுடர், தீவினை, திருவிளக்கு, துன்பங்கள், தூய்மை
D) தூய்மை, துன்பங்கள், திருவிளக்கு, தீவினை, தாய்போல், தவப்பெருஞ்சுடர்
E) விடை தெரியவில்லை

வேர்ச்சொல் கண்டறிக.
நைந்தான்

A) நஞ்சு
B) நைந்து
C) நஞ்சன்
D) ஐந்து
E) விடை தெரியவில்லை

We Shine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘படி’ என்னும் வேர்ச்சொல்லின் தன்மை ஒருமை எதிர்காலம் காட்டும் வினைமுற்றை எழுதுக.

A) படிக்கிறேன்
B) படித்தேன்
C) படிப்போம்
D) படிப்பேன்
E) விடை தெரியவில்லை

We Shine Academy ® SINCE 2 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

சரியான பொருள் தரும் ஒரெழுத்து ஒரு மொழியைத் தேர்க.

A) தே – தேடுதல்
B) மீ – வான்
C) ஏ – ஏற்றம்
D) நா – நான்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

ஒரெழுத்து ஒருமொழிக்குரிய சரியான பொருளை அறிந்து விடையைத் தெரிவு செய்க.

(a) பை
(b) மே
(c) வை
(d) து

1. உண்
2. புல்
3. அன்பு
4. இளமை

	(a)	(b)	(c)	(d)
A)	1	3	4	2
B)	3	4	1	2
C)	1	2	3	4
D)	4	3	2	1

E) விடை தெரியவில்லை

பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை தெரிவு செய்க.

'Renaissance'

A) மீட்டுருவாக்கம்
B) மறுசுழற்சி
C) மறுமலர்ச்சி
D) மீள்சிந்தனை
E) விடை தெரியவில்லை

பிழையான இணையைக் கண்டறிக.

A) கல்லில் நார் உரித்தல் – ஆராய்ந்து பாராமல்
B) ஆயிரங்காலத்துப் பயிர் – நீண்ட காலமாக இருப்பு
C) கானல்நீர் – இல்லாத ஒன்று
D) கம்பி நீட்டுதல் – விரைந்து வெளியேறுதல்
E) விடை தெரியவில்லை

சந்திப்பிழையற்றத் தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
A) கடற்கரையில் உப்பு காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலை பயிர்களும் நில பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.
B) கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலை பகுதிகளில் மலை பயிர்களும் நில பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.
C) கடற்கரையில் உப்பு காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதியில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவு தொழிலும் நடைபெறுகின்றன.
D) கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.
E) விடை தெரியவில்லை

தவறான இணையைக் கண்டறிக.

A) முரணி – உடன்பட்டு

B) பன்னகம் – பாம்பு

C) நகம் – மலை

D) கெந்தம் – பற்கள்

E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பொருத்துக :

(a) முல்லைப்பாட்டு
(b) பட்டினப்பாலை
(c) நாலடியார்
(d) வெற்றிவேற்கை

1. நறுந்தொகை
2. வேளாண்வேதம்
3. வஞ்சி நெடும்பாட்டு
4. நெஞ்சாற்றுப்படை

	(a)	(b)	(c)	(d)
A)	2	3	4	1
B)	4	3	2	1
C)	3	4	1	2
D)	2	1	4	3

E) விடை தெரியவில்லை

பொருத்துக :

(a) தமிழ்த்தூதர்
(b) பாலறாவாயன்
(c) பன்மொழிப் புலவர்
(d) சொல்லின் செல்வர்

1. திருஞானசம்பந்தர்
2. அப்பாதுரையார்
3. சேதுப்பிள்ளை ரா.பி.
4. தனிநாயகம் அடிகள்

	(a)	(b)	(c)	(d)
A)	4	1	2	3
B)	1	2	3	4
C)	4	3	2	1
D)	3	4	1	2

E) விடை தெரியவில்லை

ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

A) சிவஞான முனிவர்
B) மயிலைநாதர்
C) ஆறுமுகநாவலர்
D) இளம்பூரணர்
E) விடை தெரியவில்லை

We Shine Academy ® SINCE 2 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

“திராவிடம்” என்னும் சொல்லை முதன்முதலில் குறிப்பிட்டவர்

A) ஹீராஸ் பாதிரியார்
B) அகத்தியலிங்கம்
C) குமரிலபட்டர்
D) ஹோக்கன்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

நாயக்கர் கால சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக திகழ்வது

A) தஞ்சை பெரிய கோயில்

B) இராமேசுவரம் பெருங்கோயில்

C) திருச்சி திருவரங்கக் கோயில்

D) காஞ்சி பெரிய கோயில்

E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘தேவதுந்துபி’ எந்த ஆட்டத்துக்குரிய இசைக் கருவி?

A) மயிலாட்டம்
B) ஒயிலாட்டம்
C) தேவராட்டம்
D) காவடியாட்டம்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

“புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னின் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழிபேசி நீ களித்திருக்கும் காட்சியினைக்
கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே
இருந்தேன்”, என்று தம்பிக்குக் கடிதம் எழுதியவர் _____

A) முத்தமிழறிஞர் கலைஞர்
B) பேரறிஞர் அண்ணா
C) மூதறிஞர் இராசாசி
D) மு. வரதராசனார்
E) விடை தெரியவில்லை

“குமரிகண்ட நோய்க்குக் குமரி கொடு” இத்தொடரில் ‘குமரி’ என்னும் மூலிகை

A) கறிவேப்பிலை
B) குப்பைமேனி
C) தூதுவளை
D) கற்றாழை
E) விடை தெரியவில்லை

We Shine Academy SINCE 2021 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பொருத்துக :

(a) அன்னை முத்துலெட்சுமி
(b) மூவலூர் இராமாமிர்தம்
(c) பண்டித ரமாபாய்
(d) மலாலா

1. தேவதாசி ஒழிப்புச் சட்டம்
2. சமூகத் தன்னார்வலர்
3. பெண் கல்வி
4. புற்றுநோய் மருத்துவமனை

	(a)	(b)	(c)	(d)
A)	1	2	3	4
B)	1	3	2	4
C)	4	1	2	3
D)	3	2	4	1

E) விடை தெரியவில்லை

தமிழ் இலக்கியத்தில் ‘ஆலவாய்’ என்னும் பெயர் இவ்வூருக்கும் பொருந்தும்.

A) நெல்லை
B) திருச்சி
C) மதுரை
D) காவிரிப்பூம்பட்டினம்
E) விடை தெரியவில்லை

We Shine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

ஆங்கில அரசால், ‘வாய்ப்பூட்டுச் சட்டத்தின்’ மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டவர் யார்?

A) பெரியார்
B) ம.பொ. சிவஞானம்
C) முத்துராமலிங்கனார்
D) ப. ஜீவானந்தம்
E) விடை தெரியவில்லை

We Shine Academy SINCE 2021 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

“இன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புது நாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு” என்று உரையாற்றியவர்

A) பேரறிஞர் அண்ணா
B) ரா.பி. சேதுப்பிள்ளை
C) மகாத்மா காந்தியடிகள்
D) மு. வரதராசனார்
E) விடை தெரியவில்லை

சென்ரியு மற்றும் லிமரைக்கூ என்ற புதிய வடிவங்களில் தமிழ்க் கவிதைகள் தந்தவர்

A) கவிக்கோ அப்துல் ரகுமான்
B) கவிவேந்தர் மு. மேத்தா
C) கவிஞர் ஈரோடு தமிழன்பன்
D) இரவீந்திரநாத் தாகூர்
E) விடை தெரியவில்லை

We Shine Academy SINCE 2 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘பாவலர் மணி’ என்னும் பட்டம் பெற்றக் கவிஞர்

A) உவமைக் கவிஞர் சுரதா

B) பாவேந்தர் பாரதிதாசன்

C) கவிஞர் வாணிதாசன்

D) கவிஞர் முடியரசன்

E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீ சில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன என்று _____ குறித்து _____ கூறினார்.

A) சங்க இலக்கியம் – குமரிலபட்டர்
B) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு – உ.வே. சாமிநாதர்
C) புறநானூறு – பரிதிமாற்கலைஞர்
D) நன்னூல் – ஜி.யு. போப்
E) விடை தெரியவில்லை

ஜெயகாந்தன் இயற்றாத சிறுகதை எது?

A) குருபீடம்
B) அறம்
C) யுகசந்தி
D) புதிய வார்ப்புகள்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

ஆண்மையின் கூர்மை என திருவள்ளுவர் எதனைக் கூறுகிறார்?

A) வறியவருக்கு உதவுதல்
B) பகைவருக்கு உதவுதல்
C) நண்பனுக்கு உதவுதல்
D) உறவினருக்கு உதவுதல்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

ஒழுகல் – இலக்கணக் குறிப்பு தருக.

A) தொழிற்பெயர்
B) வினையெச்சம்
C) வினையாலணையும் பெயர்
D) பண்புத்தொகை
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

திருக்குறளின் சரியான வரியை கொண்டு நிறைவு செய்க.
தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
_____?

A) வன்மையுள் எல்லாம் தலை
B) கெடுக்குந் தகைமை யவர்
C) பேணிக் தமராக் கொளல்
D) பெற்றியார்ப் பேணிக் கொளல்
E) விடை தெரியவில்லை

கும்பகர்ணனை எழுப்பும் காட்சியை கண்முன் நிறுத்தும் சந்தம் _____.

A) வில்லை மாறி, மாறி, எய்வதால் வரும் ஓசை

B) மேகங்கள் ஒன்றோடு ஒன்று உரசும் ஓசை

C) உலக்கையால் மாறி, மாறி இடிக்கும் ஒத்த ஓசை

D) மத்தளங்களின் இடி இசை

E) விடை தெரியவில்லை

We Shine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பின்வரும் பாடல் எந்த படிம வகையைச் சார்ந்தது என்பதை கண்டறிந்து சரியானவற்றை எடுத்தெழுதுக.

“யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை
குன்றுபுகு பாம்பின் தோன்றும்” – (அகம் 391 : 11-12)

A) வினைப்படிமம்
B) மெய்ப்படிமம்
C) பயன்படிமம்
D) உருப்படிமம்
E) விடை தெரியவில்லை

கலித்தொகையில் முல்லைத் திணைக்குரிய பாடல்களை இயற்றியவரைத் தெரிவு செய்க.

A) நல்லந்துவனார்
B) சோழன் நல்லுருத்திரன்
C) சேரமான் பெருங்கடுங்கோ
D) இளநாகனார்
E) விடை தெரியவில்லை

We Shine Academy ® SINCE 2 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘சிதவல்’ – இச்சொல்லின் பொருள்.

A) முரசம்
B) ஊன்றுகோல்
C) சோம்பல்
D) தலைப்பாகை
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

சீறாப்புராணம் இவருடைய உதவியால் நிறைவுற்றது

A) அப்துல் காதிர்

B) வள்ளல் சீதக்காதி

C) அப்துல் சமத்

D) அபுல்காசிம்

E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

இரண்டிரண்டு அடிகள் கொண்ட _____ யால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

A) மோனை
B) எதுகை
C) இயைபு
D) ஒரூஉ
E) விடை தெரியவில்லை

We Shine Academy ® SINCE 2021 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பொருத்துக :

(a) விசும்பு
(b) துலை
(c) கனல்
(d) களிறு
(e) மருப்பு

1. தந்தம்
2. நெருப்பு
3. யானை
4. வானம்
5. துலாக்கோல்

	(a)	(b)	(c)	(d)	(e)
A)	4	5	2	3	1
B)	3	2	1	4	5
C)	4	3	2	1	5
D)	2	1	5	4	3

E) விடை தெரியவில்லை

கீர்த்தனை _____ வகைகளுள் ஒன்றாகும்.

A) சங்க இலக்கியம்
B) நீதி இலக்கியம்
C) பக்தி இலக்கியம்
D) சிற்றிலக்கியம்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘தெம்மாங்கு’ – பிரித்தெழுதுக.

A) தென் + பாங்கு
B) தென் + மாங்கு
C) தேன் + மாங்கு
D) தேன் + பாங்கு
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

எள்ளில் தைலம்போல் எங்கும் நிறைபொருளை
உள்ளில் துதித்தே உணர்வடைந்து போற்றீரே !
– இப்பாடலடிகளை இயற்றியவர் _____ சித்தர் ஆவார்.

A) குதம்பைச் சித்தர்
B) இடைக்காட்டுச் சித்தர்
C) பாம்பாட்டிச் சித்தர்
D) திருமூலர்
E) விடை தெரியவில்லை

“திருப்பல்லாண்டு” பாடியவர்

A) குலசேகராழ்வார்
B) ஆண்டாள்
C) பெரியாழ்வார்
D) திருப்பாணாழ்வார்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

தருமசேனர், அப்பர், வாகீசர் என்னும் பெயர்களைக் கொண்ட சைவ அடியார்.

A) திருநாவுக்கரசர்
B) சம்பந்தர்
C) சுந்தரர்
D) மாணிக்கவாசகர்
E) விடை தெரியவில்லை

We Shine Academy
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘தமிழ் மூவாயிரம்’ என்றழைக்கப்படும் நூலை இயற்றியவர் யார்?

A) நாவுக்கரசர்
B) நக்கீரர்
C) திருமாளிகைத்தேவர்
D) திருமூலர்
E) விடை தெரியவில்லை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

‘காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்’ – இத்தொடர் உணர்த்துவது

A) கவிதை எழுதுவது எளிது
B) கவிதை எழுதுவது அரிது
C) கவிதை எழுதக் காரிகைத் தேவையில்லை
D) பேரிகை கொட்டினால் பிழைக்கலாம்
E) விடை தெரியவில்லை

THANK YOU